மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) மதிப்பீட்டுத் தொகை ரூ. 26,20,920.

(இ) அக்டோபர் 1971 முடிய செலவான தொகை ரூ. 27,91,319.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இவ்வளவு செலவிடப் பட்டு கட்டப்பட்ட அந்தப் பாலத்தில் கார்கள், பஸ்கள் செல்கிற போது ஓரங்கள் சரியாக அமைக்கப்படாததால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் இருக்கிறது. ஆகவே, அதன் ஓரங்களில் தடுப்புச் சுவர்களோ, தடுப்புக் கற்களோ ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த மதிப் பீட்டில் அப்படிச் செய்யவேண்டுமென்று போடவில்லை என்ருலும், மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல் பல கருத்துக்கள் வந்திருப்பதால் அதைப் பரிசீலிக்க அதிகாரிகள் கோரப்பட்டிருக் கிருர்கள். இப்போதே மதிப்பீட்டுத் தொகையை விட அதிக மாகச் செலவாகியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்து கவனத்தில் கொள்ளப்படும்.

ஜவ்வாது மலையிலுள்ள சந்தன மரங்கள்.

* 325 வினா—**திரு. எம். ஏ. லத்தீப்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

ஜவ்வாது மலையில் சந்தன மரங்களைப் பாதுகாக்க வேண்டி, வன குத்தகைகளை சில ஆண்டுகளுக்குத் தள்ளி வைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லை.

திரு. தொ. ப. சீனிவாசன்: தலைவரவர்களே, ஜவ்வாது மலையில் குத்தகைக்கு விடப்பட்டுள்ள அந்தப் பகுதியில் 2 மாதங்களுக்கு முன்பு புதிய அம்பாசிடர் கார்களில் சந்தனக் கட்டைகளை ஓரளவு பதுக்கி கடத்திச் சென்றபோது, வனத் துறையைச் சார்ந்தவர்கள் 2-3 கார்களை துரத்திப் பிடித்து இருக்கிருர்கள். தப்பித்துச் சென்ற கார்களும் பிடிபட்டன. மேலும் அத்தகைய விலையுயர்ந்த மரங்கள் திருட்டுப் போகாமல் இருப்பதற்காக வனத்துறை எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமா?

1972 மார்ச் 6]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, குறிப்பிட்ட புகார் பற்றிச் சொல்கிறார்கள். அதுபற்றிய புள்ளி விவரம் என்னிடத்தில் இல்லை. அந்தப் பகுதியில் விறகு, மூங்கில் போன்றவற்றை வெட்டுவதற்குத்தான் ஏலம் விடப் படுகிறது. அதனால் அரசாங்கத்திற்கு 3-4 லட்சம் ரூபாய் லாபம் வருகிறது. சந்தன மரங்கள் மட்டும் தனியாகப் போடப்படுகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Because of such pilferage of sandalwood trees, would the Government stop giving the lease of cutting sandalwood trees to private contractors and will the Government do it by themselves?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அப்படி உத்தேசம் ஒன்றுமில்லை.

* 326 வினா—திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சந்தன மரங்கள் அதிகமாக உள்ள ஜவ்வாது மலை அடிவாரத் திலுள்ள ஆலங்காயம் அல்லது ஆண்டியப்பனூரில் சந்தனத் தைலம், சந்தனத் தூள் இவைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், சந்தன மரங்கள் பாது காக்கப்படவேண்டும். தமிழ்நாட்டில் முதுமலைக்காடுகள் போன்ற இடத்தில் சந்தன மரங்கள் உற்பத்தியாகின்றன. இன்றைக்கு மைசூரில் சந்தனப் பௌடர், சந்தன எண்ணெ ஆகியவற்றை உற்பத்தி செய்து பல பகுதிகளுக்கு அனுப்புகிறார்கள். நமது நாட்டில் இப்படி சந்தன மரங்கள் விளைச்சல் இருக்கக்கூடிய நேரத்தில், நாமும் அப்படிச் செய்வது நல்லது அல்லவா ? அதற்கு பைலட் ஸ்கீம் போட்டாவது அரசு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, 300 டன் எடையுள்ள சந்தனக் கட்டையைக் கொண்டு ஒரு தொழிற் சாலையை அமைக்கலாம் என்ற குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.